ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2320/04 - 2023 පෙබරවාරි මස 20 වැනි සඳුදා - 2023.02.20

2320/04 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவு மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க (விசேட வியாபாரப் பண்டங்கள்) அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இங்குள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டத்தைப் பொருத்தமட்டில், அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் விசேட பண்ட அறவீட்டினை இந்தக் கட்டளையின் மூலம் விதிக்கின்றேன்.

| *நிரல் I* | | | | *நிரல் II* |
|---|---|---|---|---|
| *பண்டத்தின் விபரம்* | | | | |
| | *இ. மு. குறியீட்டு தலைப்பு* | *இ. மு. குறியீடு* | *விபரம்* | *விசேட பண்ட அறவீடு* |
| 1 | 04.07 | 0407.21 | ஏனைய புதிய முட்டை :<br>காலஸ் டொமஸ்டிகஸ் இனக் கோழிகள் | முட்டை ஒன்று ரூபா 50.00 |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் இலங்கை அரச வர்த்தக (பொதுக்) கூட்டுத்தாபனத்தினால் மேற்கூறப்பட்ட அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 0407.21 என்ற இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட முட்டை இறக்குமதி மீது முட்டை ஒன்றுக்கு ஏற்புடையதான விசேட பண்ட அறவீடான 50 ரூபாவிலிருந்து முட்டை ஒன்றுக்கு 1 ரூபாவினை சேகரித்ததன் பின்னர் மீதித் தொகையினை தள்ளுபடி செய்வதற்கான கட்டளை ஒன்றினை இத்தால் ஆக்குகின்றேன்.

3. இந்தக் கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2023, பெப்புருவரி 21 ஆந் திகதி முதல் மூன்று (03) மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, பெப்புருவரி 20.

EOG 02 - 0238

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.